**பத்தாம் வகுப்பு – தமிழ்**

**நேரம் – 1.30 மணி** **தேர்வு - 1 (இயல் 1,2 )** **மதிப்பெண்கள் 50**

**பகுதி – I (மதிப்பெண்கள் 8)**

**i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 7×1=7

**ii) குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.**

1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.------.

அ) எந்+தமிழ்+நா ஆ) எந்த+தமிழ்+நா இ) எம்+தமிழ்+நா ஈ) எந்தம்+தமிழ்+நா

2. 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். – இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது---------

அ) இலையும்சருகும் ஆ) தோகையும்சண்டும் இ) தாளும்ஓலையும் ஈ) சருகும்சண்டும்

3. 'கேட்டாவர் மகிழப் பாடிய பாடல் இது' – இத்தொடர் இடம் பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே---------------

அ) பாடிய; கேட்டவர் ஆ)பாடல்; பாடிய இ) கேட்டவர் ; பாடிய ஈ) பாடல் ; கேட்டவர்

4. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்

உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" – பாரதியின் இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள நயங்கள் யாவை?

அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை

5. 'பெரியமீசை' சிரித்தார் – வண்ணச்சொல்லுக்கான தொகையின் வகை------

அ) வேற்றுமைத்தொகை ஆ)அன்மொழித்தொகை இ) உம்மைத்தொகை ஈ) பண்புத்தொகை

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

"முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் –நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு"

6. மேவலால் – பொருள் தருக.

அ) நீங்குவதால்,பெறுதலால் ஆ) ஒழிவதால், பெறுதலால்

இ)பொருந்துவதால்,பெறுதலால் ஈ) விளங்குவதால், பெறுதலால

7. பாடலில் இடம்பெறும் சீர்மோனைச் சொற்களை எழுதுக.

அ) முத்தமிழ் - மெத்த ஆ) அணைகிடந்ததே – இணைகிடந்த

இ) மெத்த - நித்தம் ஈ) முத்தமிழ் - முச்சங்கம்

**பகுதி – II (மதிப்பெண்கள் 8)** **பிரிவு -1**

**எவையெனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 2×2=4

8. விடைக்கேற்ற வினாவினை அமைக்க.

அ. "நாடும் மொழியும் நமதிரு கண்கள்" என்கிறார் மாகாக்கவி பாரதியார்.

ஆ. கிழக்கு என்பதற்கு குணக்கு என்னும் பெயருமுண்டு.

9. மண்ணும் சிலம்பே! மணிமேகலை வடிவே! முன்னும் நினைவால் முடித்தாழ வாழ்த்துவமே! இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள ஐம்பெரும் காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

10. காற்றுக்கு வரம் மரம்
மரங்களை வெட்டி எறியாமல்
நட்டு வளர்ப்போம் - இத்தொடர்களைப் போலவே உலக காற்று நாள்
விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத்தொடர்கள் எழுதுக.

**பிரிவு -2**

**எவையெனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வெண்டும்.** 2×2=4

11. தண்ணீர்குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைச்சொற்களை விரித்து எழுதுக; தொடரில் அமைக்க.

12. வினைமுற்றுறை வினையாலணையும் பெயராக மாற்றிக் தொடர்களை இணைத்து எழுதுக.
அ) நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.
ஆ) பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.

13. அகராதியைக் கண்டு பொருள் எழுதுக.
அ) செறு ஆ) கட்புள் -

**பகுதி – III (மதிப்பெண்கள் 9) பிரிவு - 1**

**எவையெனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 1×3=3

14. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும்வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்கடிகாரத்தில் மணி பார்த்தாள். இப்பத்தியில் அமைந்துள்ள தொகைச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு, விவரித்து எழுதுக.

15. **கீழ்க்காணும் உரையினைப் படித்து கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.**
"தமிழல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும்போது, தமிழிலுள்ள ஒருபொருட்பலச்சொல் வரிசைகள் அவற்றில் இல்லாக் குறை எந்தத் தமிழறிஞர்க்கும் மிகத்தெளிவாகத் தோன்றும். தமிழில் மட்டுமே பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்கு உரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள " என்று திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார் கால்டுவெல் அவர்கள்.
அ) தமிழல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளில் எவ்வரிசை சொற்கள் இல்லை?
ஆ) திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை எழுதியவர் யார்?
இ) இவ்வுரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

**பிரிவு - 2**

**எவையெனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 1×3=3

16. "சிறுதாம்பு தொடுத்த" எனத்தொடங்கும் முல்லைப்பாட்டுப் பாடலைப் பிழையின்றி எழுதுக.

17. உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசையிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான்... .. முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு நீர் தன்னைப் பற்றி பேசினால் கற்பனையில் தலைப்புகளை எழுதுக.

**பிரிவு - 3**

**எவையெனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 1×3=3

18. '**அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது**' இவை அனைத்தையும் யாம் அறிவோம். அது பற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை. எல்லாம் எமக்குத் தெரியும். - இக்கூற்றில் வண்ண எழுத்துகளில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.

19. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும்வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்கடிகாரத்தில் மணி பார்த்தாள். இப்பத்தியில் அமைந்துள்ள தொகைச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு, விவரித்து எழுதுக.

## பகுதி – IV (மதிப்பெண்கள் (10)

**அனைத்தது வினாக்களுக்கும் மட்டும் விடையளிக்க.** 2×5=10

20. அ) மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக. (அல்லது)

ஆ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

21. அ) மொழிபெயர்க்க.

i) If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart - Nelson Mandela

ii) Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going - Rita Mae Brown (அல்லது)

ஆ) மாநில அளவில் நடைபெற்ற ' மரம் இயற்கையின் வரம்' என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

## பகுதி - V (மதிப்பெண்கள் 16)

**அனைத்தது வினாக்களுக்கும் மட்டும் விடையளிக்க.** 2×8=16

22. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரை குறிப்புகளை எழுதுக. (அல்லது)

ஆ) மலர்ந்தும் மலராத பாதிமலர் போல்
வளரும் விழி வண்ணமே – வந்து
விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலை அன்னமே
நதியில் விளையாடி கொடியில் தலைசீவி
நடந்த இளந் தென்றலே – வளர்
பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே. - கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரைசெய்க.

23. அ) குமரிக்கடல் முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ்த்தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்குச் பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலா வந்து, அந்தாதி கூறி, கோவை அணிவித்து சிற்றிலக்கியங்களை எல்லாம் அணியாகப் பூட்டி, அழகு கூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப்புலவர்கள். இக்கருத்தைக் கருவாகக் கொண்டு சான்றோர் வளர்த்த தமிழ் என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

ஆ) புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?